# 12 இலட்சியமும் சமநோக்கும்

உலகம் இனிது நடைபெறுதற்கும், மக்கள் உயர் நலமுறுதற்கும் இலட்சியங்கள் கருவியாகின்றன. இலட்சியம் பழைமையிற் பழைமையும், புதுமையும் பெற்று நிலைபேறடைந்து திகழ்கின்றது. இலட்சியத்தினும் பழையது வேறொன்றில்லை புதியதும் வேறொன்றில்லை. முன்னோரும் இலட்சியத்தால் ஈடேறினர். நாமும் இலட்சியத்தால் ஈடேறுகின்றோம். இலட்சியமே நம் பின்னோரையும் ஈடேற்றும் வழியாயமையுமென்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

இலட்சியங்கள் பல, பல்வேறு வகையின. பல்வேறு இயல்பமைந்த இலட்சியங்களைத் தத்தம் இயல்புக்கிணங்கக் கடைப்பிடித்தொழுகும், ஒழுக முயலும் தனி மனிதர் பலர் தம்முள் ஒன்று கூடிய கூட்டமே சமூக அமைப்புக்கு அத்திவாரமாகின்றது. வள்ளுவப் பெருந்தகையாரும் தனிமனிதனை நிலைக்களனாகக் கொண்டே நல்லறங்களை வகுத்தோதிய மாண்பும் நாம் அறிந்துகொள்ளற்குரியதாகும். தனிமனிதனிடத்து இலட்சியம் அமையாதாயின், இலட்சியம் அமைந்ததொரு சமூகத்தை உலகில் உருவாக்குதல் சாலாது.

சமூகத்திலுள்ள பலர் தத்தம் இயல்புக்கேற்ற இலட்சியங்களைக் கடைப்பிடித்தொழுகுவதாலோ, கடைப்பிடித்தொழுக முயலுவதாலோ தான் உலகம் இனிமை தருகின்றது. இலட்சியமில்லையேல், உலகு இனிமை தராது. பண்பில்லாதவனுக்கு அவன் பெற்ற அறிவும் துன்பமாம். ஈகையில்லாதவனுக்கு அவன் பெற்ற செல்வமுந் துன்பமாம். பிற நற்பேறுகளும் இவ்வாறே சமூகத்தை உருவாக்கி அதனை அழகுசெய்து இன்பப் பயன் காணச் செய்கின்ற இலட்சியம் சமூகமாகிய உடலுக்கு உயிராக அமைந்துள்ளது. மனித வர்க்கத்தின் தேம்பாவணியும் இலட்சியமே.

இத்தகைய இலட்சியங்களிலே நாம் சமநோக்கம் படைத்தவர்களாக வாழ்தல் வேண்டும். ஏனெனில் எல்லா இலட்சியங்களும் எல்லாரிடத்தும் ஒருங்கே அமைவனவல்ல. இலட்சியவாதிகள் தாமும் ஈடேறிப் பிறரையும் ஈடேற்றுந் தனித்தன்மை வாய்ந்தவர்கள். இலட்சியங்களுள்ளே நாம் ஒருமைப்பாட்டினைக் காண வேண்டும். இலட்சியவாதிகளுள்ளும் நாம் ஒருமைப்பாட்டினைக் காண வேண்டும். இலட்சியவாதிகளும் தம்முள்ளே ஒருமைத் தன்மை வாய்ந்தவர்கள். ஆதலின் இலட்சியங்களுள்ளே இது நிறைந்தது, அது குறைந்தது என உயர்வு தாழ்வு கற்பித்தல் ஆகாது. இலட்சியவாதிகளுள்ளும் அவர் சிறந்தவர் இவர் குறைந்தவர் என உயர்வு தாழ்வு கற்பித்தலுந் தகாது. இவ்வாறு உயர்வுதாழ்வு கற்பிப்போர் சமூகத்தின் அடிப்படை அமைப்பினை நிலைகுலையச் செய்கின்றவராவர் .

நாம் இலக்கியங்களைப் படிக்கின்றோம். அங்கே என்ன காண்கின்றோம்? இலட்சியங்களைக் காண்கின்றோம். இலட்சியங்களைக் கடைப்பிடித்தொழுகிய இலட்சியவாதிகளைக் காண்கின்றோம். எதிர்மறை முகத்தால் இலட்சிய வாழ்வினை உயிர் பெறச்செய்த ஏனையோரையும் காண்கின்றோம். நிறைவுடைய கதாபாத்திரங்களும், குறைவுடைய கதாபாத்திரங்களும் நம்மை இலட்சியமென்கின்ற குறிக்கோளை நோக்கிச் செலுத்துவதை நாம் இலக்கியங்கள் வாயிலாக உணர்ந்து கொள்ளுகின்றோம். இந்த உணர்ச்சி நம்மிடையே பிறவாதபோது நாம் இலக்கியங் கொண்டு இடர்ப்படுவோமேயன்றி, இன்பங் காண்பதில்லை. இலக்கியத் திறவுகோலை நாம் பெறுதல் வேண்டும். பெற்றால் இன்பங் காண்போம்.

இங்கே சிலப்பதிகாரத்தில் ஒரு சிறந்த காட்சி நமது அகக் கண்ணுக்குத் தோன்றுகின்றது. சேர நாட்டிலே பேரியாற்றங் கரையின் இனிய அடைமணற் பரப்பின் மீது சேரன் செங்குட்டுவன் தன் அன்புக்குரிய தேவி வேண்மாளுடன் வீற்றிருக்கின்றான். இளங்கோவடிகளும், சீத்தலைச் சாத்தனாரும் பக்கத்தே உடனிருக்கின்றார்கள். கண்ணகிதேவி விண்ணகம் புகுந்த செய்தியினையும், பாண்டிமாதேவி உயிர் துறந்த செய்தியினையும் செங்குட்டுவன் கேள்வியுற்றதுஞ் சிந்தனையில் ஆழ்கின்றான். பின்னர்த் தன் தேவியை நோக்கி ஈதொன்றை வினாவுகிறான்.

**உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினுஞ்**
**செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்**
**தன்னுதல் வியக்கும் நலத்தோ ரியார் ?**

என்பது மன்னவன் வினாவாகும். பாண்டிமாதேவி கண்ணகிதேவி ஆகிய இவ்விருவரினும் மிகச் சிறந்தவர் யார்? என்பது வினாவின் பொருள்.

இதற்குச் சேரமாதேவி கூறிய விடைத்திறன் இலக்கிய இரசிகர்களுக்குச் சிறந்ததோர் இலக்கியத் திறவுகோலாகத் திகழ்கின்றது.

**அத்திறம் நிற்க**

என்பது தேவி கூறிய விடையாகும். இரு பெருமகளிருள்ளும் மிகச் சிறந்தவர் யாரென்று கூறவேண்டா. பாண்டிமாதேவி பெருந்திருவுறுக. கண்ணகிதேவியைக் கொண்டாட வேண்டும் என்பது விடையின் பொருளாகும். சமூக வாழ்விலே பாண்டி மாதேவி போன்ற மகளிரும் வேண்டும். கண்ணகிதேவியன்ன பத்தினித்தெய்வமும் வேண்டும் என்பதை உணர்வது கூடுமானால், இவ்விரு பெருமாதரின் இலட்சியங்களை நாம் கண்டறிதல் கூடுமானால் இலக்கிய இன்பம் நமக்குச் சித்திக்கும். இலட்சிய வாழ்வு நமக்குக் கைகூடும். இலட்சியங்களிலும் இலட்சியவாதிகளிலும் நாம் சமநோக்கம் பெற்று வாழலாம். இலக்கிய ரசிகர்களுக்கும், இலக்கிய விமர்சகர்களுக்கும், சேரமாதேவி கூறிய

**அத்திறம் நிற்க**

*என்னும் இலக்கிய மகா வாக்கியம் சாந்தியளிப்பதாக. கண்ணகியா, சீதையா? கம்பனா, பாரதியா? வள்ளுவரா, கம்பரா? யார் சிறந்தவர்? என்பன போன்ற வினாக்களிலிருந்து நாம் விடுதலை பெறுவதற்கு இவ்வாக்கியம் வழிசெய்வதாக. இவ்வழியால் வாழ்வு சிறப்பதாக.*

*மக்கள் வாழ்வில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் இலட்சியமேனும் இயைதல் வேண்டும். இலட்சியமில்லாத மனிதன் மனிதனல்லன். இலட்சியமில்லாத வாழ்வும் ஒரு வாழ்வன்று. இலட்சியமில்லாததை இலக்கியமென வாதிப்பதும் மரபன்று. இலட்சியத்துக்காக உயிர் வாழவேண்டும். உயிர் வாழ்வதற்காக இலட்சியத்தைக் கைவிடுதல்,*

***ஈமஞ்சேர் மாலை போல இழிந்திடப்பட்ட செயலாகும்.***

*இலட்சியம் அல்லது உயர் குறிக்கோள் என்பது ஒருவர் உண்ணும் உணவினும், பருகும் நீரினும் அவருக்கு இனியது, உயிரினும் பார்க்க இவருக்கு இனியது.*

**ஊனமே யான ஊனிடை யிருக்கும்**
**உயிரினைத் துறந்துமொண் பூணாம்**
**மானமே புரப்பத் தவனிமே லெவர்க்கும்**
**வரிசையுந் தேற்றமும் மரபும்**

*என அருச்சுனன் இதனை அறுதியிட்டுக் கூறுகின்றான். அவனது இலட்சியம் மானம் அதுவும் மாண்பு கடவாத மானம். உயிரைத் துறந்தாவது மானத்தைக் காப்பதே மக்களுக்கு வரிசையும், குடிப்பிறப்பும், மரபுமாகுமென முழங்குகின்ற அருச்சுனனது வாழ்விலே இலட்சியம் முதலிடம் பெறுகின்றது. உயிருக்கு இரண்டாமிடமே கிடைக்கின்றது. இலட்சியவாதிகள் தமக்கோர் இன்னல் வந்தபோது அவ்வின்னலைக் களைதற்காக இலட்சியத்தை விடுவதா, உயிரை விடுவதா? என்கின்ற சிக்கலான நிலையிலே உயிரைச் சமாதானமாக விட்டு இலட்சியத்தை நிலைநாட்டும் உறுதிபூண்டு நிற்பார்கள்.*

*இலட்சியவாதிகளின் மனப்பான்மை இலட்சியவாதிகளுக்கே விளங்கும். முல்லைக்கொடிக்குத் தேரைக் கொடுத்த பாரியும், மயிலுக்குப் போர்வையை வழங்கிய பேகனும், பெருஞ் சித்திரனாருக்குத் தனது தலையையே பரிசாக வழங்கிய குமணனும், கவசகுண்டலங்களை வழங்கிய கன்னனும் ஆகிய இவர்கள் தம்முள் ஒருவரையொருவர் அறிவர்; ஒருமை மனமில்லாத வேறு யாரறிவர் ?*

*இலட்சியவாதிகளுக்கு இலட்சியத்திலும் பெரியது வேறொன்றில்லை.*

நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற்குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே

என்னும் அழகிய சங்கச்செய்யுள் இங்கே நினைவுக்கு வருகின்றது.

இலட்சிய வாழ்வு எத்தனை பெரியதென்பதை அரிச்சந்திர மன்னனின் தியாக வாழ்க்கை பசுமரத்தாணிபோல மக்களுள்ளத்திற் பதிந்து விடுகின்றது. சத்தியதேவி சந்திரமதியின் தியாகபுத்தி தவமுனிவனின் மதியையும், வாயையும் அடைத்துவிட்ட செய்தியும் உலகறிந்த உண்மையன்றோ?

பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தனம் இனிநமக் குளதென நினைக்குங்
கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலோ மென்றான்
மதியிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்

என்று வீர கவிராசர் விழுமிய சொற்களால் இழுமெனு மோசையுடன் அழகு தமிழிற் பாடிய செய்யுளை அறியாதார் யாருளர்? இன்னும் எம்கண்காணக் கலியுக அரிச்சந்திரனான மகாத்மா காந்தியடிகள் வாழ்க்கை நடத்திய செய்தியும் நாமறிவோமன்றோ? காந்தியடிகளுக்கு இந்தியாவும் பெரிதன்று. உடலமும் பெரிதன்று. தம் உயிரும் பெரிதன்று. சத்தியமே பெரிதாயிற்றே. இஃதும் உலகறிந்த செய்தியாய் உயர் தனிச் சிறப்பினை நமக்கு நல்கி உலக சமூக நிலைமையிலே நமக்கு ஒளி தந்து நிற்கிறதே.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக உலகெங்கும் அறிவொளி பரப்பி இலட்சிய சமநோக்கிலே நிலைபெற்ற புத்தி படைத்த நாம், பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலம் தொடக்கம் அடைந்துள்ள இழிநிலையிலிருந்து விடுதலை பெறவும், மீண்டும் அகில உலகுக்கு அறிவொளி பரப்பும் பண்டைய நிலையினை அடையவும் நமக்கு வழிகாட்டிகளாகத் தோன்றிய காந்தியடிகளையும், ஏனைய இலட்சிய சமத்துவவாதிகளையும் வழுத்தி நின்று நாமும் இலட்சிய சமநோக்கத்திலே மறுமலர்ச்சியடைவோமாக.

இனி, இலட்சியவாதிகளிடத்துக் காணப்படும் மற்றொரு மாண்பினையும் நாம் உற்றுநோக்குதல் பலன் தருவதாகும். இலட்சியங்களுக்காகத் தம்மைத் தியாகஞ் செய்துயர்ந்த நல்லோரிடையே, தாம் பெற்ற இலட்சியப் பயனைத் தியாகஞ் செய்து சமபுத்தியின் சிகரத்திலே நின்ற நல்லோருள் ஒரு சிலரை இங்கே உதாரணமாகக் காணலாகும். திருவருளே இலட்சியமாகக் கொண்டு பட்டம் பதவிகளையும், பணநிதிகளையுந் தியாகஞ் செய்த மாணிக்கவாசகப் பெருமானார்,

நரகம் புகினும்
எள்ளேன் திருவருளா யிருக்கப்
பெறினிறைவா

என்று திருவருட் பயனை விடுத்து திருவருளையே வழுத்தி ஆனந்தமடைகின்றார். நரகத்தையும் மோட்சமாக மாற்றியமைக்குஞ் சமநோக்கம் படைத்த அருட்செல்வர் அவர்; அவரது சமத்துவப் புத்தியினுள்ளே இலட்சியப் பயனும் மாண்டு போகிறது.

தருமபுத்திரர் அறத்தையே இலட்சியமாகக் கொண்டவராய் அறத்தின் பயனாகக் கிடைத்த முக்தியின்பத்தையே தியாகஞ் செய்து சமநிலையே நின்றமையாற் சிறந்த அறநெறிச் செல்வர்களுக்கும் உயர்ந்த உதாரணமாகின்றார். அவர் முக்தியுலகிற்குச் செல்லும் வழியில் இலட்சிய சோதனை நடக்கின்றது. புழுத்த நாயொன்றை அங்கே காண்கின்றார். பிற உயிர்களைத் தம்முயிரிற் கண்ட சமநெறிச் செல்வராகிய அவர் தமக்கும் நாய்க்குமிடையே ஒருமை காண்கின்றார். அதன் துன்பத்தைத் தமக்கு வந்ததாகப் பாவிக்கின்றார். நாயைத் தோளிலே தூக்கி வைத்துக்கொண்டு முக்தியுலக வாயிலையடைகின்றார். நாயை வெளியேவிட்டு உள்ளே புகுமாறு முக்தியுலகம் உத்தரவிடுகின்றது. இந்த நாய்க்கு உரிமையில்லாத முக்தியுலகம் எனக்கு வேண்டாமென மறுத்துக் கூறுகின்றார். அறத்தின் பயனாகிய முக்தியையும் உடன்கொண்டு முக்தியுலகம் புகுகின்றார். இது நம் முன்னோர் கண்டனுபவித்து உலகுக்கு உபகரித்த சம நிலைக்கொள்கைக்கு ஓர் உரைகல்லாக விளங்குகின்றது.

இவ்வாறாக இலட்சியப் பயனையுந் தியாகஞ்செய்து இலட்சிய சமபுத்தியிலே நிலைநின்ற இலட்சிய புருஷர்கள் நம் நாட்டில் வாழ்ந்து வருகின்றார்கள். இனியும் வாழ்ந்து வருவார்கள். இது நியமம்.

இலட்சியவாதிகளின் தூலவடிவங்கள் மறைந்தாலும், இலட்சியங்கள் மறைந்து போவதில்லை. அவை நம்முள்ளத்தே கலந்து நம்மை ஆட்கொண்டு நிற்கின்றன. அவை அழியாநிலை பெற்றவை.

தூலவடிவில் நின்றும் மறைந்த இலட்சிய புருடர்களை இயற்கைப் புலமையும் அறிவுத் தெளிவுமுள்ள உண்மைக் கவிஞர்கள் காவியங்களிலே சூக்குமவடிவில் அமைத்துக் காட்டுகின்றார்கள். இவ்வற்புதக் காட்சியில் இலக்கிய புருடர்களைக் காணாமறக்கண்டு பேரானந்தம் அடைகின்றோம். இலட்சியங்களும் இலட்சியவாதிகளும் அபின்னம். இதேபோன்று இலக்கியங்களும் அபின்னம். இலக்கியங்களுடன் அபின்னமாய் நின்று உணர்வார்க்கு இவை புலனாகும். நூறாண்டு கழிந்தாலும் உண்மையிலக்கியங்கள் புதுமை பெற்று உள்ளங்களைத் தளிர்த்து மலரச் செய்கின்றன.

இலட்சிய வாழ்விலே நமக்கு ஏற்படுகின்ற இடையூறுகளை நாம் மேற்கொள்ள வேண்டும். இலட்சியங்களை இடையீடு படாமற் காத்தல் வேண்டும். இதற்கும் நமது இலக்கியங்களையே தாம் நாடுதல் தக்கதாம். ஓர் உதாரணத்தை இங்கே காண்போம்.

*இராமாயணத்தில் ஒரு காட்சி. தசரதன் இரண்டு இலட்சியங்களிடையே ஊசலாடுகின்றான். ஒன்று அரசியல். மற்றையது சத்தியம். இவ்விரண்டில் ஒன்றைத் தெரிவுசெய்வதில் அவன் திண்டாடுகின்றான். அரசியற் கொள்கையின்படி மூத்த புதல்வனுக்கு முடிசூட்டுவதா? அல்லது கைகேயிக்குக்கூறிய சத்திய வாக்கை நிலைநாட்டுவதா? இந்த தருமசங்கடத்தின் மத்தியிலே ஊசலாடுகின்ற அரசன் நினைக்கின்றான்; அரசியல் நிலைமாறக்கூடியது, சத்தியம் நிலைமாறாதது. நிலைமாறுந் தன்மையுள்ள அரசியற் கொள்கையைக் கைவிடுவேன்; நிலைமாறாத இயல்புள்ள சத்திய வாக்கைக் கடைப்பிடிப்பேன். இதுதான் அரசனது முடிபு. நடுநிலையிலே நின்று வாக்குறுதியைக் காப்பாற்றிச் சத்தியத்திலே நிலைநின்று உயிரைத் தியாகஞ் செய்கின்றான். சத்தியத்தின் பொருட்டுத் தனது உயிரைத் தியாகஞ் செய்த தசரதனின் வாழ்க்கையிலே நிகழ்ந்த இந்தப் பெருநிகழ்ச்சியானது நடுநிலையிலே நின்று இலட்சியத்தை நிலைநாட்டுவோருக்கு ஓர் உதாரணமாகின்றது.*

*ஐயாயிரம் ஆண்டுகளின் முன்பே கடைப்பிடித்து அனுபவித்த இலட்சிய சமநோக்கினை நாம் மீண்டும் பெற வேண்டும். இலக்கியங்களிலே பரந்துபட்டுக் கிடக்கின்ற இலட்சியங்களின் இயல்பினை நாம் கண்டறிதல் வேண்டும். இலட்சிய புருடர்களின் சமநோக்கினையும், சகிப்புத் தன்மையினையும் நாம் இலக்கியங்களாலே கற்றுக்கொள்ள வேண்டும். இலட்சிய சமநோக்குடன் நமது சமூகத்திலுள்ள உயர்வு தாழ்வுகளைச் சமன்செய்து சீர்படுத்த வேண்டும். நமது இலக்கிய பூங்காவின் நறுமணம் நமக்குப் புத்துயிரளிப்பதாக.*

சென்மலரை பண்பென்னும் நாரிற் றொடுத்தினிய
நன்மணமாம் பண்பு நனிகமழ - இன்முகமே
காட்டிப் புலவீர் கருத்திலொரு வர்க்கொருவர்
சூட்டிப் பொலிவீர் சுகம் .

***இலக்கிய கலாநிதி ஏ. பெரியதம்பிப் பிள்ளை***

### வினாக்கள்

1. இலட்சியம் என்றால் என்ன?

2. இக்கட்டுரை மூலம் ஆசிரியர் எடுத்துக் காட்டும் இலக்கியங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

3. இலட்சியங்களை உயிருக்கு மேலாக கடைப்பிடித்த இலக்கியப் பாத்திரங்கள் நான்கினைத் தருக.

4. 'இலட்சியத்திற்காக உயிர் வாழ வேண்டும், உயிர் வாழ்வதற்காக இலட்சியத்தைக் கைவிடல் ஈமஞ்சேர் மாலை போல இழிந்திடப்பட்ட செயலாகும்' என்ற தொடரை விளக்குக.

5. ''கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலோம்..'' இக் கூற்று யாரால்? யாருக்குக் கூறப்பட்டது?

6. இக்கட்டுரை மூலம் ஆசிரியர் கூறவரும் பிரதான கருத்து யாது?

7. இலட்சிய வாழ்வினால் நாம் பெறும் பயன்களை விளக்குக.

8. இலக்கியங்கள் இலட்சியங்களை எடுத்துக் காட்டும் விதத்தை ஆராய்க.

9. இக்கட்டுரையில் ஆசிரியர் கையாண்டுள்ள மொழிநடைச் சிறப்பினை எடுத்துக் காட்டுக.

10. சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகி, பாண்டிமா தேவியினூடாக சமநோக்கம் எடுத்துக்காட்டப்படும் விதத்தை விளக்குக.

### செயற்பாடு

1. பின்வரும் சொற்களுக்கு அகராதியின் உதவியுடன் பொருள் அறிக.

★ சாலாது ★ செயிரு ★ சேயிழை ★ நன்னுதல்
★ ஊன் ★ அவனி ★ பதி ★ கட்டுரை
★ வழுத்து ★ அபின்னம்

2. 'எனது வாழ்வில் இலட்சியங்களைக் கடைப்பிடித்தல்' எனும் தொனிப் பொருளில் ஒரு விளக்கக் கட்டுரை வரைக.